31.01.2025 எம்.சி.ஓ.பி. எண். 126/2019 ம.சா.1 முருகேசன்

<u>குறுக்கு விசாரணை</u>

மின்மாற்றி மீது மோதி விபத்து ஏற்பட்டது. நான் விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. மனுவில் காஞ்சிபுரம் -வந்தவாசி சாலை வழியாக பதிவு எண். டி.எண். 88 பி 5715 கொண்ட டிரெய்லர் லாரி 31.05.2019 ஆம் தேதி அதிகாலை 1.35 மணியளவில் செல்லும்போது மின்வாரியத்திற்கு சொந்தமான லட்சுமிபுரம் எஸ்.எஸ்.II 250 கே.வி.எ. மின்மாற்றியில் இருந்து சாலையை கடந்துசெல்லும் தாழ்வலுத்த மின்பாதையில் கம்பிகளை லாரியின் மேல்புறத்தில் மாட்டி இழுத்துக்கொண்டு சென்றதால் எண்.2 மின்மாற்றி கம்பங்களும், 4 சாதாரண மின் கம்பங்களும் கீழே விழுந்து முழுமையாக உடைந்துவிட்டன என சொல்லியுள்ளோம் என்றால் சரிதான், அந்த சாலையில் ஆயிரக்கணக்கான லாரிகள் செல்கிறது அதனால் விபத்து ஏற்படவில்லை. மேற்சொன்ன சங்கதி தான் முதல் தகவல் அறிக்கையிலும் சொல்லப்பட்டுள்ளது. புகாரை உதவி மின்பொறியாளர் தான் கொடுத்தார். ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். லாரியின் உரிமையாளர் சேதம் ஏற்பட்ட மின் சாதனங்களுக்கு தொகையை கட்டிவிடுவதாக சொன்னதால் உடனடியாக புகாரை கொடுக்கவில்லை, அதனால் தான் 4 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் லாரி ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் லாரியை ஓட்டி விபத்து ஏற்பட்டதாக சொல்லவில்லை. தற்போது சாட்சி அதிவேகம் என்கிற வார்த்தை இல்லை, கவனக்குறைவு என்ற வார்த்தை உள்ளதாக சொல்கிறார். உடைந்துபோன மின் கம்பங்களுக்கு மதிப்பீடு செய்தது சம்மந்தப்பட்ட அதிகாரி தான். ஸ்கிராப் மதிப்பை காண்பித்து அதனை குறைத்து தான் மதிப்பீடு செய்துள்ளோம். மின் கம்பங்கள் எந்த தேதியில் நடப்பட்டது, அதன் மதிப்பு குறைந்தது ஆகியவைகளை கணக்கீடு செய்து தான் தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் அவ்வாறு மதிப்பீடு தாக்கல் செய்யவில்லை என்றும் புதியதாக நிறுவுவதற்கான மதிப்பீடு தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சிவில் பிரிவிற்கும், மின் பிரிவிற்கும் தனியாக மதிப்பீடு

செய்ய அலுவலர் உள்ளார் என்றும் அவ்வாறு மதிப்பீடு செய்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள மதிப்பீடு நாங்களாக மதிப்பீடு செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றும் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. சாலையின் குறுக்கே தாழ்ந்த நிலையில் மின் ஒயர் சென்றது என்றும் அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் லாரி ஒட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றும் மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.